செ.வெ.எண்.43 நாள்: 26.04.2021

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.04.2021) நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், இ.கா.ப., சார் ஆட்சியர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையின்போது கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கை மையத்தில் பணியில் ஈடுபடும் அனைவரும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கைக்கு வரும் வேட்பாளர்களின் முகவர்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் நுழைவு வாயில்களில் பேரிகாட் அமைக்க வேண்டும். முகவர்கள் கட்டாயம் முககவசம் அணிந்து வர வேண்டும். உள்ளே வரும் வழியில் சாணிடைசர் பயன்படுத்தி கைகளை சுத்தப்படுத்த அறிவுறுத்த வேண்டும். காய்ச்சல் உள்ளதா என்பதையும் கண்டறிய வேண்டும்.

தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் வாக்கு எண்ணிக்கை வளாகத்தில் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். குப்பைகளை உடனுக்குடன் சேகரிக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கை மையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் முககவசம் மற்றும் பேஸ்மாஸ்க் அணிந்திருக்க வேண்டும். பொதுப்பணித்துறை மூலம் எந்தெந்த தொகுதிக்கான முகவர்கள் எந்த வழியாக வர வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் வழிகாட்டு பலகைகள் வைக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையின்போதும் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைவரும் தீவிரமாக பின்பற்ற அறிவுறுத்த வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தங்களது தொகுதி வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு தேவையான முன்னேற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும். அனைத்து தரப்பினரும் வாக்கு எண்ணிக்கை பணியை கொரோனா விழிப்புணர்வுடன் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.சங்கரநாராயணன் (கோவில்பட்டி), செல்வி.தனப்ரியா (திருச்செந்தூர்), மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.மாரியப்பன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.அபுல்காசிம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.பரிமளா, உதவி ஆணையர் (கலால்) திரு.செல்வநாயகம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திருமதி.தேவி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.போஸ்கோராஜா, தேர்தல் வட்டாட்சியர் திரு.ரகு மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.